# பாரதிய ஜனதா கட்சி

*(மத்திய அலுவலகம்)*

11, அசோக் சாலை, புதுடெல்லி- 110001

## சென்னை வந்த பாஜக தலைவர் ராஜ்நாத் சிங்கின் அறிக்கை

பிப்ரவரி 07, 2013

**<u>ஐக்கிய முற்போக்கு கூட்டணி ராஜதந்திரரீதியாக முழுமையான குழப்பத்தில் உள்ளது</u>**

அயல்நாட்டு உறவுகள் மற்றும் ராஜதந்திர ரீதியான விஷயங்களிலும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இதுவரை குழப்பமாகவே அணுகியுள்ளது. அது மட்டுமின்றி, சீரற்றும், முன்னுக்குப் பின் முரணான தன்மையுடனும் அதன் செயல்பாடுகள் இருக்கின்றன. கடந்த 8 எட்டு ஆண்டுகளாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, அண்டை நாடுகளுடன் கொண்டுள்ள அனைத்து தொடர்புகளிலும் விருப்புறுதி அற்ற தன்மையையும், செயல்பட வேண்டிய தருணத்தில் செயல்படாமல் இருந்திருப்பதையும் தொடர்ந்து பார்க்க முடிகிறது.

பாகிஸ்தானோ ஒருபுறம் இந்தியாவுக்கு எதிரான கொள்கை நடைமுறைகளில் ஈடுபட்டுவருகிறது. இன்னொரு புறம் சீனா இந்தியாவை அனைத்துத் திசைகளிலிருந்தும் நெருக்கிக்கொண்டிருக்கிறது. இந்தியாவின் ராஜதந்திர நலன்களுக்கு எதிராக பாகிஸ்தான், சீனாவுடன் உறவு வைத்திருக்கிறது. சமீபத்தில் க்வடார் துறைமுகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டைச் சீனாவுக்கு பாகிஸ்தான் வழங்கியுள்ளது. அரபிக் கடலில் உள்ள அத்துறைமுகம் சீனா வலுவாகக் காலூன்ற ஏற்ற இடமாகும். பாரம்பரியமாக இந்தியாவின் நட்பு நாடாக இருக்கும் இலங்கைகூட சீனாவுடன் கூட்டு அமைத்து தனது ஹம்பன்டோட்டா துறைமுகத்தை சீனாவுக்கு விட்டுக்கொடுத்துள்ளது.

இந்தியாவுடன் இலங்கை நாட்டு அரசு பராமரித்த அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளுக்கு சுவாரசியமான வரலாறு உண்டு. இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்கள் பிரச்னையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பல வித சமரசங்களை மேற்கொண்டது. இலங்கை அரசு புரிந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக, சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்களையும் குறைக்க ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உதவியது. இலங்கை ராணுவம் புரிந்த போர்க்குற்றங்களைப் புலனாய்வு செய்வதற்கும், நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கும் எல்எல்ஆர்சி நிபுணர் குழுவை இலங்கை அரசு உருவாக்கியுள்ளது. அந்த நிபுணர் குழு தனது அறிக்கையைத் தந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் அரசு அதன் மீது இந்நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

13ஆவது சட்டத் திருத்தத்தின்படி இலங்கை அரசு, தமிழ் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க உறுதிமொழி தந்துள்ளது. இந்த 13ஆவது சட்டத் திருத்தத்தை முன்வைத்து அனைத்து இனத்தினரையும் உள்ளடக்கிய அரசியல் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை உறுதிப்படுத்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இலங்கை அரசை நம்பிக்கையுடன் வலியுறுத்தியது. ஆனால் அதுபோன்ற எந்த உறுதிமொழியையும் தற்போது அளிக்க இயலாது என்று இலங்கை அரசு மறுத்துவிட்டது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் மிகப்பெரிய ராஜதந்திர ரீதியான தோல்வி இது. இலங்கையில் வாழும் தமிழ மக்களுக்கு ராஜதந்திர ரீதியான வழிமுறைகளைப் பயன்படுத்தி மறுவாழ்வு, நிவாரணம் மற்றும் சுயாதீன வாழ்வைத் தருவதற்கு இந்திய பிரதமர் வலிறுத்த வேண்டும் என்று பாஜக கோருகிறது.

தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்புப் பிரச்னையையும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இலங்கையிடம் எழுப்பித் தீர்வுகாண வேண்டியுள்ளது. பாக் நீரிணைப் பகுதிதான் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம். இலங்கைக் கடற்படையினரால் அவர்கள் தொடர்ந்து சித்திரவதைக்குள்ளாகும் சம்பவங்களும், சுட்டுக் கொல்லப்படும்

முற்போக்குக் கூட்டணி அரசு தீவிரமாக இலங்கையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

## காவிரி நீர் விவகாரம்

காவிரி நதி நீர் ஆணையத் தீர்வாணையம் தனது இறுதித் தீர்ப்பை பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் அரசிதழில் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் இறுதிக் கெடு விதித்துள்ளது. நீர்ப் பகிர்வு என்பது உணர்வுப்பூர்வமாகவும், அரசியல்பூர்வமாகவும் மிக ஆழமான பிரச்னையாகும். இப்பிரச்னையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தனது முடிவை நிதானமாக எடுக்க வேண்டும். ஏனெனில் மாநிலங்களுக்கிடையிலான உறவுகள் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விளைவாக அது இருக்கும். காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பாக இறுதி முடிவை எடுப்பதற்கு முன்பு தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலத்தின் இரு முதலமைச்சர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி ஒருமித்த முடிவொன்றை எடுக்க பிரதமர் முயற்சி செய்ய வேண்டும். 2007ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் தேதி காவிரி நதிநீர் விவகாரத் தீர்ப்பாணையம் தனது உத்தரவைப் பிறப்பித்தது. மத்திய அரசுதான் இந்தப் பிரச்னைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தீர்க்க வேண்டும்.

## இந்தியாவில் வளர்ந்துவரும் கலாசார சகிப்பின்மை

சமீபத்தில் நாடெங்கும் ஏற்பட்ட கலாச்சார விவகாரங்கள் தொடர்பான சர்ச்சைகள் குறித்து பா.ஜ.க. கவலைப்படுகிறது. பன்முகத்தன்மை வாய்ந்த, புதிய சிந்தனைகள் இயங்குவதற்கான சாத்தியத்தை தடுப்பதன் மூலம் இந்திய சமூகத்தை மிக சகிப்பின்மை வாய்ந்த சமூகமாக மாற்றும் அபாயத்தில் இருக்கிறோம்.

திரைப்படங்கள், இசை, நூல்கள் மற்றும் பிற பொது உரையாடலுக்கான படைப்பு செயல்பாடுகள் தான் மாற்று சிந்தனைகள் வளர்வதற்கான களங்களாக உள்ளன. அவை செழித்து வளர போதுமான சுதந்திர வெளி அவசியம். அத்தகையை

சிந்தனைகளை எதிர்ப்பவர்களுக்கு தங்கள் முரண்பாட்டை வெளிப்படுத்த அனைத்து உரிமைகளும் உள்ளன. ஆனால் மிரட்டல், அச்சுறுத்தல் மற்றும் வன்முறை இவற்றிற்கு இடமே இல்லை.

இந்திய அரசியல் சாசனம் கொடுத்திருக்கும் கருத்துச் சுதந்திரம் என்பது எல்லையற்றதல்ல. அது பொறுப்புணர்விலிருந்து வருவது. சமூக அடையாளங்கள் முக்கியமானவை. அத்துடன் அந்த அடையாளம் தொடர்பான நுண்ணுணர்வுகளை ஒருவர் தெரிந்தே காயப்படுத்தக் கூடாது. துரதிர்ஷ்டவசமாக சில குறுங்குழுக்கள் இதையே காரணமாக வைத்து, கலை மற்றும் நாட்டின் கலாச்சாரம் தொடர்பான ஆரோக்கியமான விவாதங்களுக்குள் புகுந்து திசைதிருப்ப முயல்கின்றனர்.

கலாசாரப் பிரச்னைகள் தொடர்பாக வளர்ந்துவரும் சகிப்பின்மை குறித்த அறிவார்ந்த பொது விவாதம் ஒன்று தேவை. கலை, கலாச்சாரம் மற்றும் இசை போன்ற துறைகளில் நூற்றாண்டுகளாக இந்திய சமூகம் சகிப்புத்தன்மை வாய்ந்த சமூகமாக இருந்துவந்துள்ளது. பாரம்பரியமாகவே முற்போக்குத்தன்மை வாய்ந்த அந்த சமூகப் பண்பை நாம் மறுஉறுதி செய்ய வேண்டிய நேரம் இது.

**(ஓ.பி.கோஹ்லி)**
தலைமை நிலையப் பொறுப்பாளர்